(*a*) whether any representation was made to the Government complaining about the appointment of a Trustee in Arulmigu Anjaneyar Swami Devasthanam, Villupuram, South Arcot District ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

தென்னுற்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி தேவஸ்தானத்தில் அறங்காவலர் நியமனம்.

திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலேய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னுற்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி தேவஸ்தானத்தில் அறங்காவலர் நியமனம் பற்றி அரசுக்கு புகார் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சட்டப்படி தகுந்த அறங்காவலர்களே நியமிக்க கடலூர் உதவி ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

Recognition given to Saint Theresa's High School, Ootacamund.

1 *S.N.Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether recognition given to St. Theresa's High School, Ootacamund in the Nilgiris District has been withheld from June 1973 ; and

(*b*) if so, the reasons therefor ?

உதகமண்டலத்திலுள்ள புனித தெரசா உயர்நிலேப் பள்ளிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்திலுள்ள புனித தெரசா உயர் நிலேப் பள்ளிக்கு (St. Thersa's High School) அளிக்கப்பட்ட அங்கீகாரம், 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?

1973 டிசம்பர் 3]

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இப் பள்ளி 1962–63ம் ஆண்டு துவங்கப்பட்டது. கல்வி ஆண்டு 1972–73 வரை இப்பள்ளிக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டது. தற்போது பள்ளியை நிரந்தரமாக அங்கீகாரம் செய்யவேண்டும் என்னும் கோரிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது. இருப் பினும், அப்பள்ளிக்கு டிசம்பர் 1973 வரை பணியாளர் மானியம் கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, அங்கீகார விண்ணப்பத் தில் ஏதோ காரணம் காட்டி தற்காலிக அங்கீகாரமாவது பள்ளிக்குக் கொடுக்க வேண்டுமென்று பள்ளி கேட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே நிரந்தரமான அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பாக ஒரு ஆண்டோ, இரண்டு ஆண்டுகளோ, மூன்று ஆண்டுகளோ நிபந்தனையோடு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்படுமேயானால், நிரந்தர அங்கீகாரத்திற்கு வேண்டு மான விவரங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கின்றார் கள். அதை அரசு பரிசீலித்து தற்காலிக அங்கீகாரம் வழங்க முன் வருமா என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1962–63-ஆம் ஆண்டில் இந்தப் பள்ளி துவக்கப்பட்டாலும் ஆண்டு தோறும், ஒவ்வொரு ஆண்டாக தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட் டிருக்கிறது. அதே முறையில்தான் தற்காலிக அங்கீகாரம் வழங்கப் படுகின்றது. டிசம்பர் இறுதிக்குள்ளாக, கொடுக்கப்பட வேண்டிய விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, நீலகிரி டையோசிசன் சொசைடி சார்பாக என்டோமெண்ட், அறக் கட்டளை ஏற்படுத்தப்பட்டிருக் கின்றது. அதைப் பள்ளியினுடைய பெயரிலே மாற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்கள் சொசைட்டியின் பெயரிலே காட்டியிருக்கின்றார்கள். இதை உயர்நிலைப் பள்ளியின் பெயரிலேயே காட்ட வேண்டுமென்பது ஒன்று. உரிமம் பெற்ற பொறியாளரின் சான்றிதழ் கட்டிடத்திற்காக ஒன்று கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கின்றது. நிர்வாகக் குழுவில் இருக்கின்ற உறுப்பினர்களின் விவரம் கேட்கப்பட்டிருக்கின்றது. இந்த மூன்று விவரங்களும் கொடுத்து விடுவார்களானால், அதற்குத் தற்காலிக அங்கீகாரம் அளிப்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இராது. அங்கீகாரம் பெற விவரங்கள் தர வேண்டும். விரைவிலே விவரங்கள் வராவிட்டால், எப்போதும் கொடுக்கப் படுகின்ற தற்காலிக அங்கீகாரம் தான் தரவேண்டி வரும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, சொத்தை மாற்றி எழுது வதிலேதான் கால தாமதம் ஆகின்றது. ஏனென்றால் அந்த சொசைட் டியினுடைய கவுன்சிலில் உள்ளவர்களுடைய தீர்மானத்தைப் போட்டுத் தான் எழுத வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். ஆகவே அந்த ஒரு நிபந்தனையை நிறைவேற்றும்வரை ஒரு ஆண்டுக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கலாமென்ற முடிவை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நிலைமையை விளக்கி அவர்கள் தற்காலிக அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று ஒரு விண்ணப்பம் போட்டார்களானால், அதன்மீது தற்காலிக அங்கீகாரம் தரலாம். அதற்குள்ளாக கேட்கப்படுகின்ற இந்த விவரங்களை அவர்கள் தர வேண்டும்.

Complaint against a Sub-Judge of Thanjavur.

2 *S.N.Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a letter of complaint about the behaviour of a Sub-Judge at Thanjavur was submitted to the Hon. the Chief Minister, by two Legislators during the beginning of the year ;

(*b*) if so, the nature of the complaint ; and

(*c*) the action taken thereon ?

தஞ்சாவூர் துணை நீதிபதி ஒருவரின் மீது புகார்.

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள துணை நீதிபதி ஒருவரின் நடத்தை குறித்து இந்த ஆண்டின் தொடக்கத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குப் புகார்க் கடிதம் ஒன்று பணிந்தனுப்பப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அப்புகாரின் தன்மை யாது ?

(உ) எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இவரது நடத்தை குறித்துச் சில குற்றச்சாட்டுகளை அவர்கள் செய்துள்ளனர்.

(உ) இதுபற்றி அரசு விசாரணை செய்து வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மனு கொடுத்தார்கள் என்று இருக்கின்றது. அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யார் ? நடத்தையில் சொல்லப் பட்ட கோளாறு எத்தகையது ?